நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம் - 14.09.1901

# செந்தமிழ்

பகுதி: 10

தொகுதி: 112

திருவள்ளுவர் ஆண்டு 2049

திங்கள் இதழ்

விலை: ரூ.20

அக்டோபர் - 2018




நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

# தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி** | தலைவர் |
| மருத்துவர் **ந.சேதுராமன்** | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | செயலாளர் |
| **திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | உறுப்பினர் |
| முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்** | உறுப்பினர் |
| பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்** | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | உறுப்பினர் |
| திரு. **துரை கருணாநிதி** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |

# செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | தலைவர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | செயலாளர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | உறுப்பினர் |
| பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **து.மாயராசன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **சு.சிவசாமி** | உறுப்பினர் |
| பொறிஞர் **லெ.சிவக்குமார்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி** | உறுப்பினர் |
| திரு. **ஜெ.பாலதண்டாயுதம்** | உறுப்பினர் |
| முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன | உறுப்பினர் |
| முனைவர். **கி.வேணுகா** முதல்வர் (பொ) | உறுப்பினர் |
| முனைவர். **கோ.சுப்புலெட்சுமி** துணை முதல்வர் | உறுப்பினர் |
| முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர் | உறுப்பினர் |

# பொருளடக்கம்


1. இதழ் மணம் 4

2. சிலப்பதிகாரப் புதையல்கள் - இன்பத் துன்பு 7
   - முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. இறந்தகாலம் - ஒரு புதிய பார்வை 12
   - பேராசிரியர் இரா.கோதண்டராமன்
   சென்ற இதழின் தொடர்ச்சி

4. தொல்காப்பியம் கூறும் கவிதை மொழி 22
   - பேராசிரியர் ப.மருதநாயகம்
   சென்ற இதழின் தொடர்ச்சி

5. சைவசித்தாந்தமும் திருமந்திரமும் 29
   - முனைவர் உ.கருப்பத்தேவன்
   சென்ற இதழின் தொடர்ச்சி

6. நற்றிணையில் பண்பாட்டு விழுமியங்கள் 33
   - பேராசிரியர் வை.காசிநாததுரை

7. சங்கச் செய்திகள் 37



வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in


| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 3,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 20 | |

# இதழ் மணம்

"சிலப்பதிகாரப் புதையல் அறிஞர் இளங்குமரனார்.

சிலப்பதிகாரம் ஒரு பெருங்காப்பியம், அதன் கண் அமைந்த பாத்திரங்கள் வியப்பும் பெருமிதமும் நிறைந்தவை. கண்ணகிக்கும் கோவலனுக்கும் ஏற்பட்ட துன்பங்கள் கற்பவர் நெஞ்சை உருக்கும் இயல்பின; அத்துன்பங்கள் நிகழக்கூடாது என்ற ஏக்கமும் எதிர்பார்ப்பும் கற்பவர் உள்ளக்கிடக்கை. பாத்திரப்படைப்பில் ஆசிரியரின் படைப்பாற்றல் கற்பவர் நெஞ்சைப்பிழிகின்றது. படைப்பு தன் இயல்பில் அமைகிறது. கண்ணகியையும் கோவலனையும் நினைக்கும் தோறும் அன்பும் அன்பின்பாற்பட்ட ஏக்கமும் ததும்பி நிற்கிறது. அன்பின் மிகுதி தீமையைத் தவிர்க்க நினைக்கிறது; அது ஒருவகையான அன்பின் உள்ளக்கிடக்கை; அதனைத் தூண்டுவது ஆசிரியனின் படைப்பாற்றல்; ஊழின் வலிமை வாழ்க்கையின் இறுதியை, விலக்க முடியா முடிவை, யாரும் மாற்ற முடியாது என்பது இளங்கோ சொல்லவரும் செய்தி; அதற்குரிய பின்புலத்தை காப்பியம் முழுவதும் கட்டமைப்பது ஆசிரியனுடைய படைப்பு ரகசியம். அதனை அறிஞர் இளங்குமரனார் பலகால்கற்ற தம் பட்டறிவு கொண்டு, காப்பிய அமைப்பும், சொல்லின் புனைவும் கவிதை மொழியும் காப்பியத்தை நடத்திச் செல்வதை எடுத்துரைக்கும் அரிய முயற்சி; காப்பியத்தை திரும்ப ஒருமுறை கற்கத் தூண்டுகிறது; ஆசிரியன் முயற்சி மாணவர்களைக் கற்கத் தூண்டுவதே.

இந்த ஆண்டு சிலப்பதிகார விருது வழங்கிச் சிறப்பிக்கும் விழா முதுமுனைவர் அறிஞர் இரா.இளங்குமரனாருக்குச் சென்னையில் நடைபெற உள்ளது. செந்தமிழ் இதழும் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கமும் பெருமித உணர்வோடு தம் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

பேராசிரியர் இரா.கோதண்டராமன் மொழி நூல் கட்டுரை நிறைவு பெறுகிறது. இந்தியாவில் உள்ள மொழிநூல் அறிஞர்களுடன் நீண்ட நெடிய தொடர்புடைய பெருமகனார் பேராசிரியர் இரா.கோதண்டராமன்; மேலைநாட்டு அறிஞர்களுடைய நூல்களையும் கற்றுத் துறைபோகிய பெரியார். அவருடைய மொழிநூல் கட்டுரைகள் மாணவர்கள்

ஆசிரியர்கள் படித்தும் பயன்பெற வேண்டியவை. அவர்கள் இனிவரும் இதழ்களிலும் தொடர்ந்து எழுதுவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் ப.மருதநாயகம் கவிதைக்குரிய சொல்வளம் நிறைந்த மொழி தமிழ் என்பதை இப்பகுதியில் விளக்குகிறார். தொல்காப்பிய இலக்கணம் உரிச் சொற்களை எடுத்துரைக்கிறது. அவை சங்க இலக்கியத்தில் பயன்பாட்டில் உள்ளதையும் குறிப்புப் பொருள் உணர்த்துவதையும் இசை, பண்பு ஆகிய பண்ணும் உணர்வும் நிறைந்த கவிதை ஊடகமாக அமைந்திருப்பதன் அருமைப்பாட்டை உணர்ந்த மொழிநூல் அறிஞர்கள் தமிழ்மொழியின் கவிதை மொழியை வியந்து பாராட்டுவதையும் மேலைநாட்டு அறிஞர்களின் கருத்துக்களோடு ஒப்பிட்டுத் தமிழ்மொழி வளர்ச்சியை நமக்கு அறிவுறுத்துவதோடு கவிதை மொழியாக நம் முன்னோர்களால் பேணி வளர்க்கப்பட்டிருப்பதையும் பிற நாட்டு மொழிகளில் அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படாத குறைபாட்டையும் சுட்டி உணர்த்துகிறார். வழக்கு மொழியினும் கவிதை மொழி சிறந்திருப்பதை சேக்சுபியர் கவிதை வழி உணர்வதையும் எடுத்தியம்புவது கண்டு உணர்தற்குரியதாகும். செய்யுள் கட்டமைப்பிற்குச் சொல்லே அடித்தளம் என்றுணர்ந்த தமிழ்ச் சான்றோர் மிகப் பழங்காலத்திலேயே தமிழைக் கவிதைமொழியாகச் செப்பம் செய்திருப்பதை தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய முப்பகுதியிலும் உள்ள நூற்பாக்கள் உணர்த்துவதை காண்பது தமிழின் தொன்மையையும் அது செவ்வியல் மொழி என்பதையும் நீண்ட நெடுங்காலமாகப் பேணப்பட்டு வருவதையும் உணரமுடிகிறது.

“சைவ சித்தாந்தமும் திருமந்திரமும்” என்னும் தலைப்பில் பேராசிரியர் உ.கருப்பத்தேவன் இப்பகுதியில் திருமந்திரம் குறித்து விரிவாகச் சிந்திக்கிறார்.

“அறிவு அறிவு என்ற அறிவும் அனாதி” என்னும் திருமூலர் திருமந்திரத் திருப்பாட்டை எடுத்து விளக்குகிறார். ‘அறிவும் அனாதி, கடவுளும் அனாதி, உலகம் அனாதி’ என்னும் திருமந்திரம் ஆழ்ந்த சிந்தனைப்புலம் உடையது. அனாதி என்பது அழிவற்றது என்னும் பொருள் தரும், முப்பொருளும் அனாதி. திருமந்திரத்திற்கு உரை எழுதிய

பேராசிரியர் சுப.அண்ணாமலை "மேல்நிலையின் உண்மை எது என்றால், மவுனம் சாதிப்பதன்றி வாய் திறப்பதிலையே" என்னும் வள்ளலார் திருப்பாட்டை மேற்கோள் காட்டுகின்றார். (பக்கம் 158 மூன்றாம் பகுதி திருமந்திரம்). மரபு சார்ந்த உரைகளே பெரும் பகுதியாக உள்ளன; கேள்வியும் ஐயவினாவும் எழுகின்றபோது ஆய்வுநோக்கு விரிவடைகிறது. பல்கலைக்கழகங்கள் கேள்வி, ஐயம் (Questioning and doubting) என்னும் திறனாய்வுப் பயிற்சியை முன் எடுத்துச் செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. மரபை மட்டுமே தொடர்ந்தால் திருமந்திரத்தின் பெரும் பகுதியான பாடல்களுக்கு விளக்கம் காணுதல் அரிதாகும். சைவசித்தாந்த சாத்திரநூல் பட்டியலில் திருமந்திரம் இடம்பெறவில்லை; அது மிகவும் பழைமையான நூல்; நிறைய பாடபேதங்கள் இருப்பதால் சரியான பொருளைத் துணிந்து காண்பது அரிது. ஆசிரியர் கருப்பத்தேவன் முயற்சி பாராட்டுக்குரியது.

பேராசிரியர் வை.காசிநாததுரை, "நற்றிணையில் பண்பாட்டு விழுமியங்கள்" என்னும் தலைப்பில் கட்டுரை வரைந்துள்ளார். மக்கள் போற்றவேண்டிய மிக உயர்ந்த செய்தியாக தமிழ் இலக்கியம் காட்டும் விழுமியம் எது என்பதை ஆசிரியர் எடுத்துரைப்பது எண்ணி இன்புறத்தக்கது. பொதுவாக பொருள் ஈட்டுவது குறித்தே சிந்திக்கின்ற சமுதாயத்தில் பேண வேண்டிய பண்பாக நற்றிணை இலக்கியம்

"சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வமென்பதுவே"

என்னும் உலகம் தழுவிய செய்தியை உலகுக்கு வழங்கியுள்ளது. உலகமாந்தர் பெரும்பகுதி தம் சொந்த நலம் பேணுவதையே நோக்கமாகக் கொண்டு வாழ்கின்றனர். பிற உயிர்களின் துன்பம் கண்டு கசிந்த உள்ளமும் அருள் நோக்கமும் இருக்கும் மாந்தரே செல்வம் பெற்றவர் ஆவர். மற்றவர் செல்வம் பெற்றிருந்தாலும் திருவருள் பேறு இல்லாதவரே ஆவர். அதனை உணர்ந்த நம் முன்னோர் உயிர்கள் மாட்டு பரிந்து இரக்கமும் அன்பும் உடையவர்களாக வாழ்வதை வலியுறுத்துகின்றனர். பேராசிரியர் காசிநாததுரை தம் கட்டுரையில் இச்செய்தியை இனிது விளக்கியுள்ளார்.

# சிலப்பதிகாரப் புதையல்கள்

## 15 இன்பத் துன்பு

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

ஓர் அறத்தைக் கூறுவதில் இருவகை உண்டு. ஒன்று, உடன்பாடு; மற்றொன்று எதிர்மறை.

திருக்குறளில், "நட்பு, கூடா நட்பு
ஒழுக்கம், கூடா ஒழுக்கம்
செங்கோன்மை, கொடுங்கோன்மை

என்பன போன்றவற்றைக் கருதுக. இவை அதிகாரப்பகுப்பு. ஒரு பாடலிலேயே இவ்வாறு உடன்பாடு எதிர்மறை என இருவகையும் இடம் பெறப் பாடுதல் உண்டு.

"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."
"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"
"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

இன்னவை காண்க.

வாழ்த்துவகை பல. அவை உடன்பாட்டு வகையாலேயே பெரிதும் இடம்பெறும். ஆனால் எதிர்மறை வகையிலும் இடம் பெறல் காணக்கூடியவையே. அந்நிலையில் பாவலர் உளக்குறிப்பு வெளிப்படு உத்தியாக அமைதலையும் அறியலாம்.

அகப்பாடல் ஒன்றில் (86)
"கற்பினின் வழாஅ நற்பல உதவி
பெற்றோன் பெட்கும் பிணையை ஆகு"

என்பது மங்கல மகளிர், மங்கல நீராட்டி மங்கல வாழ்த்தாகக் கூறுவது.

"கற்புடன் வாழ்ந்து நற்பல உதவி"

எனின் உடன்பாடாகி விடல் இயல்பு, தலைவன் தலைவி பெயர் சுட்டிக் கூறப்படாத அகப்பாட்டு வாழ்த்து அது (அகம் 86)

இளங்கோவடிகளார் 'மங்கல வாழ்த்துக் காதை' என்பதே முதல் காதையாகக் கொண்டு நூலை இயற்றுகிறார்.

திங்கள், ஞாயிறு, மழை, பூம்புகார் வாழ்த்துகளை நூல் வாழ்த்தாக அல்லது காப்பிய வாழ்த்தாகக் கூறுகிறார்.

கோவல கண்ணகியர் திருமணம் நிகழ்த்தும் மகளிர், கண்ணகியைக்,

"காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீது அறுக என" ஏத்துகின்றனர்.

மூன்று வாழ்த்துமே உடன்பாடாக அமையவில்லை

"காதலால் ஒன்றி கவவுக் கையளாய்
நலமுறுக"

என வாழ்த்த எந்த இடரும் அடிகளார்க்கு இருந்திராது. எனினும் மூன்றையும் எதிர்மறை வாழ்த்தாகவே உரைத்தார் (1:61-62)

கோவல கண்ணகியர் வழிவழியாக வாழ்ந்து வந்த பூம்புகாரை,

"பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுஅறு சிறப்பில் புகாரே ஆயினும்
நடுக்கின்றி நிலைஇய என்ப தல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்"

இங்கேயும் அனைத்தும் எதிர்மறையே!

எழுவு அறியாது, பொதுஅறு, நடுக்குஇன்றி, ஒடுக்கம் என்பவற்றைக் காண்க.

கண்ணகியாரைத் 'தீதிலா வடமீனின் திறம் இவள்திறம்' என்னும் இடத்தும் எதிர்மறையே ஆகின்றது: "அருந்ததி அன்னாள் என்கிறாரே (64) சாலி ஒருமீன் தகையாள் என்கிறாரே (51)

கோவலன் மண்தேய்த்த புகழன்; அவனைப் பாராட்டுவார்

"பண் தேய்த்த மொழியர்! தேய்க்காமல் வளர முடியாதா?

"குலத்திற் குன்றாக் கொழுங்குடி" (2:8)

கண்ணகியைப் பாராட்டும் கோவலன் "தீராக் காதலனாம்" (2:36)

அவன் பாராட்டுவதோ "குறியாக் கட்டுரையாம்" (2:37)

மங்கல அணி, "மறுவின் மங்கல" அணியாம் (2:63)

மாசறு பொன்னாம். காசறு விரையாம் (2:73-74)

"மலைஇடைப் பிறவா மணி"

"அலையிடைப் பிறவா அமிழ்து"

"யாழிடைப் பிறவா இசை" (2:77-79)

"மறப்பருங் கேண்மை" (2:85)

இவ்வெல்லாமும் முதலிரண்டு காதைக் குள்ளேயே!

"சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை" (3:5, 6)

"மூன்றின்ஒன்று குறைபடாமல் (3:9)

"ஆசின்றுணர்ந்த ஆசான் (3:32)

"வசையறு கேள்வி" (3:35)

"அசையா மரபு" (3:36:42)

"மாற்றோர் செய்த வசை" (3:43)

"நாத் தொலைவில்லா" (3:44)

இப்படி எண்ணின் மிகப்பல்கும். ஆகலின் எதிரிடையில் தொடரும் சில இடங்களை மட்டும் காண்போம். மாதவி ஆடல் பாடல் அழகு என்பவற்றில் மயங்கிய கலைவல்லானாம் கோவலன், 1008 களஞ்சு தந்து மாலையை வாங்கி,

"விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
வடுநீங்கு சிறப்பின்தன் மனையகம் மறந்"தான்

இரண்டும் முரண்கள் இல்லையா. "வடு நீங்கு", "விடுதல் அறியா." அந்திமாலைப் பொழுது வருகிறது கதிர் மறைகிறது; மதியும் தோன்றவில்லை. அரைசு கெடுத்து அலம்வரும் அல்லல் காலையாகிறது. கையறு நெஞ்சக் கண்ணகி ஊதுலைக்குருகின் பெருமூச்சுவிட்டு நிற்றல் கழி துயராகின்றது (குருகு = துருத்தி) இவை எதிரது உரைத்தல் இல்லையா?

கண்ணகி கருங்கண்ணும் மாதவி செங்கண்ணும்
முறையே இடமும் வலமும் துடித்தன என்கிறார்.

கருங்கண் என்றது, கண்ணகிக்குப் புணர்ச்சி இல்லாமையால்
செங்கண் என்றது, மாதவிக்குப் புணர்ச்சி விதும்பலால்
கண்ணகிக்குக் கூட்டமுண்டாகையால் இடக்கண் துடித்தன
மாதவிக்குப் பின்பு பிரிவுண்டாகையால் வலக்கண் துடித்தன
என்பது அரும்பத விளக்கம் (5: 237-239)

கானல்வரியில் வரும் யாழ், 'குற்றம் நீங்கிய யாழ்': அதுவோ (கூடலை ஊடல் ஆக்க ஊரும்) உறவும் ஒழித்து ஓட வைக்கிறது!

(உறவோடிருந்தும் மாதவி அலமருகிறாள்; தனித்துயர் அடைகிறாள்.

(தனித்திருந்த கண்ணகி தீக்கனவு கண்டு கலங்குகிறாள்!

ஆறுதல் கூறவந்த தோழி தேவந்தி தீர்த்தநீர் ஆடிக்

கணவனைக் கூடலாம் என்கிறாள். கண்ணகியோ, 'பீடு அன்று' என்கிறாள். கண்ணகியார் காப்பியம் தொடங்கி ஒன்பது கதைப்பகுதி நடந்து சொல்லும் **முதல்சொல், 'பீடு அன்று'** என்பதே!

"பெருமையராகிய நீங்கள் இப்படிப் புறப்பட்டதேன்?" என்று துணைக்கு வர இருந்த கவுந்தியடிகள் வினவக் கோவலனோ 'உரையாட்டில்லை' (சொல்லுதற்கு இல்லை) என்கிறான். வினாவுக்கு ஏற்ற விடையா இது. உறுகணாளரில் (துன்பமுறும் பாவமுடையவர்) புறப்பட்டீர். இவ்வாறு போதல் வேண்டா எனின், நீங்கள் கேட்கமாட்டீர் என்பதைக் கவுந்தியடிகள் கோவல கண்ணகியரிடம்

"ஒழிகென ஒழியீர்" என்கிறார்.

காடுகாண் காதையில் "தீது தீர் தென்னவன்" எனப்படுகிறான்.

அவனைக் காண்பவன் "தீத்திறம் புரிந்தோன்" (எரியோம்பாளன்) எனப்படுகிறான். மதுரைக்கு வழி கோவலனை நோக்கிக் கூறுகிறான் மாங்காட்டுப் பார்ப்பான்.

"கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்தியல் இழந்த வியனிலம் போல"

என அவன் தொடங்கி வழி கூறுகிறான் (2:11: 60, 61)

கோவலன், "குன்றாக் கொள்கைக் கோவலன்"
எனப்படுகிறான். (2:11:163)

கானுறை தெய்வம் ஒன்று கோவலன் தனித்த இடத்துத் தோன்றி "கோவலன் செய்தான் கொடுமை" என மாதவி கூறியதாகக் கூறுகிறது. (கக.178)

"காய்கதிர் திருகலின் நடுங்கஞர் எய்தி
ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்ப
நறும்பல் கூந்தல் குறும்பல உயிர்த்து"க்
கண்ணகி ஐயை கோட்டத்தில் தங்குகிறாள்.

தேவராட்டி சாலினி என்பாள் கண்ணகியை நோக்கி,

"இவளோ, கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி"

என்கிறாள். இதற்கு அரும்பத உரையார் "கண்ணகிக்கு நிகழ்வது கூறினாள்" என்கிறார். மண்ணவள் விண்ணவள் ஆவாள் என்பது அஃதாம்.

அங்கிருந்து மதுரைப் புறஞ்சேரிக்குப் புறப்படுகின்றனர்.

"கோள்வல் உளியமும் கொடும்புற் றகழா
வாள்வரி வேங்கை மான்கணம் மறலா
அரவும் சூரும் இறைதேர் முதலையும்
உருமும் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோல் தென்னவர் காக்கும் நாடு" (13:5-9)

என்று கூறுபவர், இரவு வருதலை,

"கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்
படுங்கதிர் அமையம்"

காட்டுகிறார். (13:15-16)

உளியம் முதலியவை கேடு செய்யாச் செங்கோல் தென்னவர் நாடு என்று இக்காதையிலேயே பாராட்டிய கவுந்தியடிகள்,

'கொடுவரி மறுகும் குடிஞை கூப்பிடும்
இடிதரும் உளியமும் இனையா தேகு"

என்று கண்ணகிக்குக் கூறுகிறார்.

கோவலன் விடியலில் கண்ணகி கவுந்தியரை

"தீதுதீர் சிறப்பில் சிறையகத் திருத்தி"

ஒருபால் செல்கிறான் (13:41)

பின்னர் மூவரும் புறப்படுகின்றனர்.

'மதுரை நனிசேய்த் தன்று' என்ற கோசிகன்,

'தனிநீர் கழியினும் தகைக்குநர் இல்"

என்கிறான்.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# இறந்தகாலம் - ஒரு புதிய பார்வை

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்,**
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு, அசோக்நகர்,
புதுச்சேரி - 605008
கைபேசி: 9443151044

**சென்ற இதழின் தொடர்ச்சி**

70.0 வினைப்பகுதி: செந்; 'செல்'; இறந்தகாலப்பகுதி: செந்த்- (cend-) 'சென்று'

| | |
|---|---|
| (1) *செலின்ற்உ > செலின்று | (இன்ற்உ > இன்று) |
| (2) செலின்று > செலிந்து | ( இன்று > இந்து) |
| (3) செலிந்து > செல்ந்த் (உ) | (இ > φ /ந்த்) |
| (4). செல்ந்த் > செந்த் | (ல் > φ / -ந்த்) |

செந்த்+என் > செந்தென் 'சென்றேன்'

71.0 வினைப்பகுதி: வெர் 'வா'; இறந்தகாலப்பகுதி: வெர்ஞ் - 'வந்து'

| | |
|---|---|
| (1) *வெரின்ற்உ > வெரின்று | (இன்ற்உ > இன்று) |
| (2) வெரின்று > வெரிஞ்ச் (உ) | (இன்று > இஞ்சு) |
| (3) வெரிஞ்ச் > வெரிஞ் | ( -ச் > φ / ஞ்-) |
| (4) வெரிஞ் > வெர்ஞ் | (இ > φ / ர்-ஞ்) |

72.0 வினைப்பகுதி: கொய் 'கொய்'; இறந்தகாலப்பகுதி: கொஞ் 'கொய்து'

| | |
|---|---|
| (1) *கொயின்ற்உ > கொயின்று | (இன்ற்உ > இன்று) |
| (2) கொயின்று > கொயிந்து | (இன்று > இந்து) |
| (3) கொயிந்து > கொய்ந்து (உ) | (இ > φ / ய் - ந்து) |
| (4) கொய்ந்த் > கொய்ஞ்ச் | (ந்த் > ஞ்ச் / ய்- ) |
| (5) கொய்ஞ்ச் > கொய்ஞ் | (ச் > φ / ஞ்-) |
| (6) கொய்ஞ் > கொஞ் | (ய் > φ /-ஞ்) |

73.0 வினைப்பகுதி: பய்ப் 'பகிர்'; காலப்பகுதி: பய்த்- 'பகிர்ந்து'

(1) *பயின்றஉ > பயிற்று (இன்றஉ > இற்று)

(2) பயிற்று > பயித்து (இற்று > இத்து)

(3) பயித்து > பயித் (உ) (இத்து > இத்உ)

(4) பயித் > பய்த் 'பகிர்ந்து' (இ > ϕ / ய்-த்)

(5) பய்த் + எத் > பய்த்எத் (Payted) 'பகிர்ந்தது'

74.0 வினைப்பகுதி: இட் (i□)'இடு'; இறந்தகாலப்பகுதி: (இட்ட்-) 'இட்டு'

(1) *இட்-இன்றஉ > இடிற்று (இன்றஉ > இற்று)

(2) இடிற்று > இடித்து (இற்று > இத்து)

(3) இடித்து > இடித்(உ) (இத்து > இத்உ)

(4) இடித் > இட்த் (இ > ϕ /ட்-த்)

(5) இட்த் > இட்ட் (த் > ட்/ட்-)

இட்ட் - எத் > இட்டெத் (i□□ed)'இட்டது'

75.0 வினைப்பகுதி: நெத் (ned) 'நாறு'; இறந்தகாலப்பகுதி: நெத்த்- (nett-) 'நாறி'

(1) *நெறு-ன்றஉ > நெறுற்று (ன்றஉ > ற்று)

(2) நெறுற்று > நெறுத்து (ற்று > த்து)

(3) நெறுத்து > நெறுத் (உ) (த்து > த்உ)

(4) நெறுத் > நெற்த் (உ > ϕ /-த்)

(5) நெற்த் > நெத்த் 'நாறி' (ற் > த் / -த்)

76.0 வினைப்பகுதி : மென் (<*மன்) 'இரு'; இறந்தகாலப்பகுதி: மெத்த்- (mett-) 'இருந்து'

(1) *மெனின்றஉ > மெனிற்று (இன்றஉ > இற்று)

(2) மெனிற்று > மெனித்து (இற்று > இத்து)

(3) மெனித்து > மென்த்த்(உ) (இ > ϕ /ன்-த்த்)

(4) மென்த்த் > மெத்த் (ன் > ϕ /-த்த்)

மெத்த்-எத் > மெத்தெத் (metted) 'இருந்தது'

3.17. கதப (ஒல்லாரி)

77.0 வினைப்பகுதி: தின்; இறந்தகாலப்பகுதி: திண்ட் - (tinḍ)

(1) *தினின்ற்உ > தினின்று (இன்ற்உ > இன்று)

(2) தினின்று > தினிண்டு (ன்ற் > ண்ட்)

(3) தினிண்டு > தினிட் (உ) (ண் > ɸ /-ட்)

(4) தினிட் > திண்ட் (இ > ɸ /-ட்)

78.0 வினைப்பகுதி: 'மன்'; இறந்தகாலப்பகுதி: மட்-

(1) *மனின்ற்உ > மனிற்று (இன்ற்உ > இற்று)

(2) மனிற்று > மனிட்டு (இற்று > இட்டு)

(3) மனிட்டு > மனிட்(உ) (ட்ட் >ட்)

(4) மனிட் > மன்ட் (இ > ɸ /-ட்)

(5) மன்ட் > மண்ட் (ன் > ண் /-ட்)

(6) மண்ட் > மட்ட் (ண் > ட்/-ட்)

(7) மட்ட் > மட் (ட்ட் > ட்)

79.0 வினைப்பகுதி : வர் 'வா'; இறந்தகாலப்பகுதி: வந்

(1) *வரின்ற்உ > வரின்று (இன்ற்உ > இன்று)

(2) வரின்று > வரிந்து (இன்று > இந்து)

(3) வரிந்து > வரிந்நு (ந்த் > ந்ந்)

(4) வரிந்து > வரிந்(உ) (ந்ந் > ந்)

(5) வரிந் > வர்ந் (இ > ɸ /ர்-ந்)

(6) வர்ந் > வந் (ர் > ɸ /-ந்)

80.0 வினைப்பகுதி: 'கொய்'; இறந்தகாலப்பகுதி: கொந்-

(1) *கொயின்ற்உ > கொயின்று (இன்ற்உ > இன்று)

(2) கொயின்று > கொயிந்து (இன்று > இந்து)

(3) கொயிந்து > கொயிந்த் (உ) (ந்த் > ந்ந்)

(4) கொயிந்ந் > கொய்ந்ந் (இ > ɸ /-ந்ந்)

(5) கொய்ந்ந் > கொந்ந் (ய் > ϕ /-ந்ந்)

(6) கொந்ந் > கொந் (ந்ந் > ந்)

81.0 வினைப்பகுதி: சய் 'சாவு'; இறந்தகாலப்பகுதி: சந்-

(1) *சயின்ற்உ > சயின்று (இன்ற்உ > இன்று)

(2) சயின்று > சயிந்து (இன்று > இந்து)

(3) சயிந்து > சயிந்ந் (உ) (ந்த் > ந்ந்)

(4) சயிந்ந் > சய்ந்ந் (இ > ϕ /-ந்ந்)

(5) சய்ந்ந் > சந்ந் (ய் > ϕ /-ந்ந்)

(6) சந்ந் > சந் (ந்ந் > ந்)

3.18. மால்தோ

82.0 வினைப்பகுதி: மென் (<*மன்) 'இரு' இறந்தகாலப்பகுதி: மென்ஜ்-

(1) *மெனின்ற்உ > மெனின்று (இன்ற்உ > இன்று)

(2) மெனின்று > மெனிஞ்சு (இன்று > இஞ்சு)

(3) மெனிஞ்சு > மெனிஞ் (உ) (ஞ்ச் > ஞ்)

(4) மெனிஞ் > மென்ஞ் (இ > ϕ /-ஞ்)

83.0 வினைப்பகுதி: கொய்; இறந்தகாலப்பகுதி: கொஸ்

(1) *கொயின்ற்உ > கொயிற்று (இன்ற்உ > இற்று)

(2) கொயிற்று > கொயிச்ச் (உ) (இற்று > இச்ச்)

(3) கொயிச்ச் > கொயிச் (ச்ச் > ச்)

(4) கொயிச் > கொயிஸ் (ச் > ஸ்)

(5) கொயிஸ் > கொய்ஸ் (இ > ϕ /-ஸ்)

(6) கொய்ஸ் > கொஸ் (ய் > ϕ /-ஸ்)

84.0 வினைப்பகுதி: bar (<*வர்) 'வா'; இறந்தகாலப்பகுதி: barc

(1) *வரின்ற்உ > வரிற்று (இன்ற்உ > இற்று)

(2) வரிற்று > வரிச்ச்(உ) (இற்று > இச்ச்)

(3) வரிச்ச > வர்ச்ச் (இ > ϕ /-ச்ச்)

(4) வர்ச்ச் > வர்ச் (ச்ச் > ச்)

(5) வர்ச் > barc (வ் > b)

3.17. வடதிராவிடக் குழுமத்தைச் சேர்ந்த குடுஹ், மால்தோ, பிராகுயி ஆகிய மூன்று மொழிகளின் இறந்தகாலப் பகுதிகள் இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. தென் மற்றும் நடுவண் திராவிடக் குழுமத்தைச் சேர்ந்தவற்றுள்ளும் சில மொழிகளே ஆய்வுக்கு இங்கே எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வின் முடிபுகளை மேற்படி குழுமங்களைச் சார்ந்த பிற மொழிகளுக்கும் விரிவுபடுத்தலாம்.

### அடிக்குறிப்புகள்

1. **பாடியான், பாடியாள், பாடியார்** முதலான வாய்பாட்டு வினைகள் பழந்தமிழில் வினையாலணையும் பெயர்களாகவே வழங்குகின்றன. ஆயினும், **-ஆன், -ஆள், -ஆர், -ஆய்** ஆகிய ஈற்று வினைமுற்றுக்கள் **-ஓன், -ஓள், -ஓர், ஓய்** ஈற்று வினைகளாகவும் நிகழும் எனத் தொல்காப்பியர் (சொல்.சேனா.211, 212) குறிப்பிடுவதால் **பாடியான், பாடியாள், பாடியார், பாடியாய்** ஆகிய வாய்பாட்டு வினைகளும் **பாடியோன், பாடியோள், பாடியோர். பாடியோய்** வாய்பாட்டு வினைகளாகத் திரிந்து நிகழும் நிலை தமிழில் காணப்படுகிறது. எனவே, **பாடியான், பாடியாள்** முதலான வாய்பாட்டு வினைகள் தொடக்கத்தில் பயனிலையாகவும் நிகழ்ந்திருக்க வேண்டும். பழந்தமிழில் இந்த வாய்பாட்டு வினைகள் வினையாலணையும் பெயர்களாகவே நிகழ்கின்றன. திருக்குறளில் நிகழும் இந்த வினைகளைக் கருத்தில் கொள்க: **அடங்கியான்** (124), **நீக்கியார்** (330), **பற்றியார்** (748), **நீங்கியான்** (341), **எண்ணியார்** (494, 666), **இழுக்கியான்** (535), **துன்னியார்** (188, 494) இந்த வினைகள் அனைத்தும் வினையாலணையும் பெயர்களாகவே நிகழ்கின்றன.

2. **இ, இய்** ஆகிய இரண்டும் எழுத்தியலால் கட்டுண்ட இறந்தகாலச் சார்ந்துருபுகள் (Phonologically Conditidoned Past Allomorphs) ஆகும். எ-டு. **பாடி, பாடிய /பாடியான்/பாடியோன்/ பாடியவன். பாடிச்செல்** என்ற தொடரில் காணப்படும் வல்லொற்று மிகுதியானது மகரத்தின் திரிபு என முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, **பாடி** என்பது ***பாடிம்** என மீட்டுருவாக்கற்பாலதாகும். ***பாடிம்** என்பது **பாடு+இம்** என்ற அமைப்பினதாகும். **இம்** என்பது ***இய்ம்** என்ற அடிநிலை அமைப்பினதாகும். இந்த அமைப்பில் யகரம் கெட்டு ***இய்ம்** என்பது **இம்** என அமைகின்றது. ***இய்ம்** என்பதில் நிகழும் **இய்** என்பது இறந்தகால

விகுதியாகிய இகரக் கிளவியின் சார்ந்துருபாகும். **இன்** என்பது ***இம்** (‹*இய்ம்) என்பதன் திரிபாதலின், அது **இய்** என்பதினின்றும் தோன்றியதாகிறது. இந்த ஆய்வில் விடுவிக்க முடியாமல் உள்ள ஒரு புதிர் மகரக் கிளவியின் பொருண்மை விளக்கமாகும்.

3. Subramanyam (1971: 201) maintains that "in the majority of the Tamil dialects earlier past stems like cey-t, pey-t are analogically replaced by ce-ñ j, pe-ñj etc., on the model of me-nj (<mēy-ñt), kā-ñj (<kāy-ñt), etc., which contain the predominant suffix - **nt.**"

4. இது தொடர்பான கிருஷ்ணமூர்த்தியின் குறிப்புரை கருத்தில் கொள்ளத்தக்கதாகும். கருதுக "Even where South Dravidian - I Languages do not have **-nt-**, Parji-Ollari-Gadaba had a past **-nd-**, Pa.Koy(Koñ) 'to cut, reap'. These roots in old Tamil had **-t** as past marker, cey (cey-t-) 'to do', but modern spoken Tamil has **sey-(se-ñj-)** presupposing a past form with ***-nd-*** (sed-nd-)" (Krishnamurthi, Bh, 2003; 295). எனவே சுப்ரமண்யத்தின் கருதுகோள் இந்த வகையில் ஏற்புடையதன்று.

5. **இட்டு, இண்டு** ஆகியவை பாடிட்டு/ செய்திட்டு, பாடிண்டு/செய்திண்டு ஆகிய வாய்பாட்டு வினைகளில் நிகழ்கின்றன. **பாடியதுண்டு/செய்ததுண்டு** என்பது மலயாளத்தில் **பாடிட்டு உண்டு** (>பாடிட்டுண்டு) / **செய்திட்டு** (>செய்திட்டுண்டு) **உண்டு** என வழங்கும். **பாடிண்டு / செய்திண்டு** வாய்பாட்டு வினைகள் பார்ப்பன வழக்கில் தற்சுட்டுப் பொருண்மையை உணர்த்தும்.

6. உருபனியலில் விளக்கமுடியாத உருபொலியன்களில் மென்மை கருதியவையாகக் கொள்வது கால்டுவெல்லின் ஆய்வில் பல இடங்களில் காணப்படுகிறது. கருதுக. "The euphonisation of **d** which occurs most frequently, and is most characteristic of Tamil, is its conversion into **nd.** This conversion takes place without phonetic necessity and solely through that fondness for nasalization which is so deeply inherent in Tamil and Telugu, especially in Tamil, and by means of which the formatives **gu, du** and **bu** have so generally been changed to **ṅgu, ndu**, and **mbu.** In the majority of cases in Tamil in which **d** (preceded by a vowel or semi vowel) once formed the sign of the preterite, it has been nasalized into **nd;** whilst Canarese, wherever it has preserved the primitive **d,** has preserved it unnasalized and pure (Caldwell, Robert. 1961:501)

7. In the... dialects of Tamil, the suffix **-t-** of the earlier stage has been analogially replaced by **-nt-** after verbs ending in **-n,** and **y+nt** changed to **-nj-** therefore for earlier **cey-t-,** etc., these dialects have now **ce-nt-,** etc., and reason for this change seems to be that after verbs ending in **-y,** the suffix **-nt-** is more common than **-t-** which is restricted only to a handful of verbs". (Subrahmanyam, p.5, 1971:191)

8. **இன்** என்பதற்கு **இ** என்பதும் (எ-டு. பாடி, ஆடி) **இய்** என்பதும் (எ-டு. பாடிய, ஆடிய) சார்ந்துருபுகளாகும். **பாடியான், பாடியோன்** ஆகிய வினைகளில் -**இய்**- என்ற கால விகுதியைக் காணலாம். **இய், இன்** ஆகிய இரண்டு கால விகுதிகளும் இரு வேறு கிளைமொழிகளுக்கு உரியனவாக நிகழ்ந்து பின்னர் **இய்** என்பது **இன்** என்பதன் சார்ந்துருபாக மாறியது.

9. **இன்** என்ற இறந்தகால விகுதியில் னகரத்தைச் சாரியையாகக் கருதவும் வாய்ப்புள்ளது. ஆனால் இந்த ஆய்வில் **இன்** என்பதை முழுமையான கால விகுதியாகவே கொள்ளப்படுகிறது. **பாடின** என்ற பெயரெச்சம் தமிழ், தெலுங்கு இரண்டிலும் காணப்படுவது கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

10. **சேர்** என்பது செயப்படுபொருள் குன்றிய வினைப்பகுதி, செயப்படுபொருள் குன்றா வினைப்பகுதி என இரு வினைப்பகுதிகளாகக் கருதப்படும். செயப்படுபொருள் குன்றிய வினையாயின் -***ந்த்உ** என்பது -**ந்து** எனவும் குன்றிய வினையாயின் -***ந்த்உ** என்பது -**த்து** எனவும் திரிந்தமையும். **நினைந்து, நினைத்து** ஆகியவற்றைப் பொருத்தவரை -***ந்த்உ** › **{ந்து, -த்து}/ நினை** - என்ற எழுத்தியல் விதி செயல்படும். **ஈந்து, ஈத்து** ஆகியவற்றுக்கும் இந்த விதி பொருந்தும்.

11. **போயின்று, போயிற்று** ஆகிய வினைமுற்றுக்கள் **பாடின்று, பாடிற்று** வாய்பாட்டு வினைகளாகக் கொள்ளப்படும்.

12. மொழிமுதல் பழங்கன்னடப் பகரம் இக்காலக் கன்னடத்தில் ஹகரமாகத் திரிந்து நிகழும். இந்த ஆய்வில் பழங்கன்னட வழக்கே கருத்தில் கொள்ளப்படுகிறது.

13. **கழன்ற், அகன்ற், ஆண்ட்** முதலான வினைகள் கன்னடத்தில் **கழந்த், அகந்த், ஆண்ட்** எனத் திரிந்து பின்னர் **கழல்த், அகல்த், ஆள்த்** என மறு ஆய்வு செய்யப்பட்டதாக எமினோ கருதுவார். இதனைத் தொடர்ந்து **கழலித், அகலித, ஆளித்** ஆகிய வடிவங்கள் கன்னடத்தில் தோன்றி அமைந்தன என்பது இவரது கருத்தாகும். இது தொடர்பான அவருடைய கருதுகோள் பின் வருமாறு: 'It will have been noted ... that in place of the past suffix *-**i**- of other south Dravidian languages, Kanada has -**id**- in the equavalent class even in the oldest records. This can only be the older *-**i**- plus the spreading of -**d**-. Sooner or later even -**d**- in many of its occurrances was displaced by -**id**-;e.g **agald**- (... remade from **aganr > agand-)** latter was remade as **agalid-, -, ald- (<*ānd)** as ālid-; another example is kēl 'to

ask, hear', the past stem of which on the basis of the other SDr languages is *ket-; which is remade in Kannada as keḷd- and then latter as keḷid- This Kannada remaking of this system, by spread of the suffix **-d-** at the expense of **t-** by analogical addition of **-d-** to some stems which otherwise have morphologically less than obvious past stems, and by addition of **-d- to -i- is** far -reaching innovation shared by none of the other SDr languages and separating Kannada from all others, as well from the other Dravidian languages." (Emeneau, M.B, 1994:100). எமினோவின் இந்தக் கருதுகோள் நமது ஆய்வில் ஏற்புடையதாகக் கொள்ளப்படவில்லை.

14. பர்ஜி மொழியில் (Burrow & Bhattacharya 1953 : 45), **செந்த்** (Cend), **திந்த்** (tind) ஆகியவை இறந்தகாலப் பகுதியாகவும் எதிர்காலப் பகுதியாகவும் நிகழ்வதாகக் கருதப்படுகின்றது. **செந்தென் 'சென்றேன்', திந்தென் 'தின்றேன்'** ஆகியவற்றில் **செந்த், திந்த்** இறந்தகாலப் பகுதிகள் என்றும் **செந்தன் 'செல்வேன்', திந்தன் 'தின்பேன்'** ஆகியவற்றில் எதிர்காலப் பகுதியாகவும் செயல்படுவதாகக் கருதப்படுகின்றன. **என், அன்** ஆகிய தன்மை ஒருமை இயைபு விகுதிகள் இறந்தகால வினைகளையும் எதிர்கால வினைகளையும் தெளிவுபடுத்துகின்றன. இது அமைப்பியல் நிலையில் ஏற்புடைய விளக்கமாயினும் ஒரே காலப்பகுதி இறப்பையும் எதிர்வையும் உணர்த்துகின்றன என்பது ஏற்கத்தக்கதன்று. **செந்து, திந்து** ஆகியவை **சென்று, தின்று** ஆகியவற்றின் திரிபுகளாக அமைந்து இறந்தகாலப் பகுதிகளாகின்றன. எதிர்காலப் பகுதிகளாக நிகழ்கையில் **செந்து, திந்து** ஆகியவற்றின் அடிநிலை வடிவங்கள் ***செலுந்து, *தினுந்து** ஆகிய செயுந்து வாய்பாட்டினவாகும். கன்னடத்திலும் **கேள்த்உ** என்பதைக் **கேளித்து, கேளுத்து** ஆகியவற்றினின்றும் தோன்றியதாகக் கருதலாம். ஆனால் அத்தகைய நிலை கன்னடத்தில் காணப்படவில்லை. எனவே இரண்டாவது காரணத்தை முனைப்பாக எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை.

15. தெலுங்கு இறந்தகால விகுதிபற்றிய கால்டுவெல்லின் கருதுகோள் பின்வருமாறு: "Though the preterite verbal participle never takes any suffix but that of / some parts of the preterite tense of the verb in the higher idiom of the language (viz.the first and second persons both singular and plural) insert the particle **ti** between the / of the verbal participle and the pronominal terminations.. It, therefore, follows that we must regard **ti** as a sign of past

time subordinate indeed to /." (Caldwell, Robert, 1961:505)

*16.* **-இவி**, **-இரி** *ஆகிய முன்னிலை விகுதிகள்* **பாடுத்** *என்ற எதிர்காலப்* பகுதியுடன் சேரும்போது உயிரொலி இயைபின் காரணமாக அவை **-உவு**, **-உரு** எனத் திரிகின்றன. கருதுக: **பாடுத்+இவு** > **பாடுத்உவு** 'பாடுவாய்', **பாடுத்+இரி** > **பாடுத்உரு** 'பாடுவீர்'. இந்த வினைகள் இந்த ஆய்வாளரின் மொழியில் நிகழ்பவையாகும். பழந்தமிழில் நிகழும் **பாடுதிர்** என்பது இறவாக்கால முன்னிலைப் பன்மை வினையாகும். தெலுங்கில் இது **பாடுத்உரு** எனத் திரிந்தமைகிறது.

## சுருக்கவிளக்கம்

| | |
|---|---|
| அகம் | - அகநானூறு |
| ஐங் | - ஐங்குறுநூறு |
| க.பு. | - கந்தபுராணம் |
| கலி | - கலித்தொகை |
| கன் | - கன்னடம் |
| குறள் | - திருக்குறள் |
| குறு | - குறுந்தொகை |
| தெ | - தெலுங்கு |
| சேனா | - சேனாவரையம் |
| சொல் | - சொல்லதிகாரம் |
| தொல் | - தொல்காப்பியம் |
| நற் | - நற்றிணை |
| பரி | - பரிபாடல் |
| புறம் | - புறநானூறு |
| மதுரைக் | - மதுரைக்காஞ்சி |
| PCDr | - Proto Central Dravidian |
| SDr | - South Dravidian |

## கருவி நூல்கள்

Burrow, T & Bhattacharya, S.1953. **The Parji Language** (Dravidian Language of Bastar). Hertford, Stephen Austin & Sons, Ltd.

Caldwell, Robert, (First Edition, 1856) 1961 (Reprint), **A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages,** Chennai, University of Madras.

Emeneau, M.B., 1994, **The South Dravidian Languages. In Dravidian Studies: Selected Papers.** Delhi, Motilal Banarasidass Publishers Private Ltd.

Krishnamurthi, Bh, 2003. **The Dravidian Languages.** Cambridge (UK), Cambridge University Press.

Subrahmanyam, P.S., 1971, **Dravidian Verb Morphology (A Comparative Study),** Annamalai Nagar, Annamalai University.

## பைந்தமிழ்த் தொண்டர் பாண்டித்துரையார்

சங்கத்துக் கீரனுக்குச் செந்தமிழ்ச் சேரனவன்
மஞ்சத்தே துயின்றிடவே மான்கவரி வீசியபோல்
நாராயண ஐயரெனும் நறுந்தமிழின் அறிஞரவர்
பேராய மஞ்சத்தில் பெருந்துயிலில் ஆழ்ந்திருக்க
பாண்டிதுரை மன்னரவர் பண்பாளர் விசிறியினால்
தீண்டறியத் திருக்கையால் திகைத்திடவே வீசிநின்றார்
வாளெடுக்கும் வரைக்கைகள் வண்டமிழ்ப் புலவர்தம்
தாள்வருடி விட்டதென்றால் தமிழ்தொண்டை யாதென்பேன்!

-செஞ்சொற் பாவலர்: ப.சங்கரலிங்கம்

# தொல்காப்பியம் கூறும் கவிதை மொழி

பேரா **ப.மருதநாயகம்**
ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113
கைபேசி: 94427 87727

**சென்ற இதழின் தொடர்ச்சி**

**7**

செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டு வரும் உரிச்சொற்களுக்குப் பொருள் கூறும் இயல் உரியியல் ஆகும் என்பர். இதன் பயன் அறியாத பர்னல் (A.C.Burnel) என்னும் மேலை அறிஞர் இது தேவையற்றது என்று எழுதுவார். கவிதை ஊடகமாகப் பல ஆயிரம் ஆண்டுகள் பயின்று வரும் மொழியிலேயே இத்தகைய உரிச்சொல் வளர்ச்சியைக் காண இயலும். இன்றைய மேலை மொழிகளிலோ, வழக்கொழிந்த செம்மொழிகளிலோ இத்தகைய வளம் பெருக வழியில்லை. உரிச்சொல்லின் தன்மையையும் வழங்குமாற்றையும் **தொல்காப்பியம்** கீழ்க்கண்டவாறு விளக்கும்:

> உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு வரும். அவை பெயர் போலவும் வினை போலவும் அமைந்து அவ்விரு சொல்லாதற்கு உரிமை உடையவாய்த் தம் பகுதிகள் திரிந்து தோன்றும். ஒரு சொல் பல பொருளை உணர்த்தலும் பல சொற்கள் ஒரு பொருளை உணர்த்தலும் உண்டு. கேட்பவனால் ஒரு சொல் முன் அறியப்படாததாக இருந்தால் அச்சொல்லை அறியப்பட்ட சொல்லோடு சார்த்திப் பொருளை உணர்த்தல் வேண்டும். உரிச்சொற்கள் தத்தமக்குரிய இயல்பில் நின்றும் தாம் பொருந்தி நிற்கும் பெயரும் வினையுமாகிய நிலைக்களன்களால் வேறுவேறு பொருள்களை உணர்த்தும். (நூற்பா 297)

இதற்கு உரையாசிரியர்கள்,

இசை : செவியால் உணரப்படுவது

குறிப்பு : உள்ளத்தால் உணரப்படுவது

பண்பு : ஐம்பொறிகளைக் கொண்டு உணரப்படுவது

பெயர்போன்று அமையும் உரிச்சொல் : கறுப்பு

வினைபோன்று அமையும் உரிச்சொல் : தவ

என்று பொருள் விரிப்பர்.

இவ்வியலில் பேசப்படாத உரிச்சொற்கள் பல உண்டு என்பதைத் தொல்காப்பிய நூற்பா ஒன்று, "தெளிவாகப் பொருள் விளங்கும் உரிச்சொற்களை எடுத்துக்கூறல் தேவையற்றதென்பதால் வெளிப்படையாய்ப் பொருள் உணரமுடியாத உரிச்சொற்களே பொருளுடன் இவ்வியலில் தரப்படுகின்றன" (298) என்று உணர்த்தும். கீழ்க்கண்ட உரிச்சொற்கள் தொல்காப்பியப் பட்டியலில் இடம்பெறுவதோடு அவ்வவற்றிற்குரிய பொருளில் சங்கச்சான்றோரால் பேணப்பெற்றவை:

| **உரிச்சொல்** | **குறிப்புப்பொருள்** |
|---|---|
| உறு, தவ, நனி | - மிகுதி |
| உரு | - அச்சம் |
| புரை | - உயர்வு |
| குரு, கெழு | - நிறம் |
| செல்லல், இன்னல் | - துன்பம் |
| மல்லல் | - செழிப்பு |
| ஏ | - பெருக்கம் |
| உகப்பு | - உயர்தல் |
| உவப்பு | - மகிழ்ச்சி |
| பயப்பு | - பயன் |
| பசப்பு | - பசலைநிறம் |
| இயைபு | - புணர்ச்சி |
| இசைப்பு | - இசை |
| அலமரல், தெருமரல் | - சுழலுதல் |
| மழ, குழ | - இளமை |
| கீர்த்தி | - பெரும்புகழ் |
| மாலை | - இயல்பு |
| கூர்ப்பு, கழிவு | - சிறந்து நிற்றல் |

| | |
|---|---|
| கதழ்வு, துனைவு | - விரைவு |
| அதிர்வு, விதிர்ப்பு | - நடுக்கம் |
| வார்தல், போகல், ஒழுகல் | - வரிசைமுறை, நீட்சி |
| தீர்தல், தீர்த்தல் | - விடுதல் |
| கெடவரல், பண்ணை | - விளையாட்டு |
| தட, கய, நளி | - பெருமை |
| தட | - பெருமை, வளைவு |
| கய | - பெருமை, மென்மை |
| நளி | - பெருமை, செறிவு |
| பழுது | - பயன் இல்லாமை |
| சாயல் | - மென்மை |
| முழுது | - எஞ்சாமை, முழுமை |
| வம்பு | - நிலையில்லாமை |
| மாதர் | - காதல் |
| நம்பு, மே | - விருப்பம் |
| ஒய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய் | - நுணுக்கம் |
| புலம்பு | - தனிமை |
| துவன்று | - நிறைவு |
| முரஞ்சல் | - முதிர்வு |
| வெம்மை | - வேண்டல் |
| பொற்பு | - பொலிதல் |
| வறிது | - சிறிது |
| ஏற்றம் | - நினைவு, துணிவு |
| பிணை, பேண் | - பாதுகாத்தல் |
| பணை | - தவறுதல், பருத்தல் |
| படர் | - நினைத்தல், செல்லுதல் |
| பையுள், சிறுமை | - நோய் |
| எய்யாமை | - அறியாமை |
| நன்று | - பெரிது |
| தா | - வருத்தம், வலிமை |

| | |
|---|---|
| தெவு | - கொள்ளுதல் |
| விறப்பு, உறப்பு, வெறுப்பு | - செறிவு |
| விறப்பு | - செறிவு, அஞ்சுதல் |
| கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் | - ஓசை |
| அழுங்கல் | - ஓசை, இரக்கம், கேடு |
| கழும் | - கலந்திருத்தல் |
| செழுமை | - வளமை, கொழுமை |
| விழுமம் | - சீர்மை, சிறப்பு, துன்பம் |
| கருவி | - கூட்டம் |
| கமம் | - நிறைவு |
| அரி | - மென்மை |
| கவவு | - சேர்தல் |
| துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல் | - இசைத்தல் |
| இரங்கல் | - இசைத்தல், கழிந்ததற்கு வருந்துதல் |
| இலம்பாடு, ஒற்கம் | - வறுமை |
| ஞெமிர்தல், பாய்தல் | - பரந்துபடுதல் |
| கவர்வு | - விருப்பம் |
| சேர் | - திரண்டிருத்தல் |
| வியல் | - அகன்றிருத்தல் |
| பே, நாம், உரும் | - அச்சம் |
| வய | - வலிமை |
| துயவு | - அறிவுவேறுபாடு |
| உயா | - வருந்துதல் |
| உசா | - ஆராய்தல் |
| வயா | - மிகுந்த விருப்பம் |
| கறுப்பு, சிவப்பு | - சினம், நிறவேறுபாடுகள் |
| நொசிவு, நுழைவு, நுணங்கு | - நுண்மை |
| புனிறு | - அண்மையில் ஈன்றது |

| | |
|---|---|
| நனவு | - ஆடுகளம், அகலம் |
| மத | - இளமை, வலிமை, ஊக்கம், அழகு |
| யாணர் | - புதுவருவாய் |
| அமர்தல் | - பொருந்துதல் |
| யாண் | - அழகு |
| பரவு, பழிச்சு | - வழுத்துதல், போற்றுதல் |
| கடி | - நீக்குதல், கூர்மை, காவல், புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்நின்று தெளிவித்தல், ஐயம், கரிப்பு |
| ஐ | - வியப்பு |
| முனைவு | - வெறுப்பு |
| வை | - கூர்மை |
| எறுழ் | - வலிமை |

இவ்வுரிச்சொல் பட்டியல் பாணினி தமது வடமொழி இலக்கண நூலில் தரும் கற்பனையான, பொய்யான வேர்ச்சொல் பட்டியல் போன்றது அன்று. தொல்காப்பியம் தரும் உரிச்சொற்கள் யாவும் பழந்தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணக்கிடப்பவை; தொடர்ந்து கவிஞர்களால் கையாளப்பெற்றவை.

உரியியலின் இறுதியில் தொல்காப்பியர் குறிப்பிடும் கருத்துகள் நுட்பமானவை; மேலை மொழிநூல் வல்லார் தெரிந்திருக்க வேண்டியவை.

மேலே பொருள் விளக்கப்பெற்ற உரிச்சொற்கள் யாவற்றிற்கும் அச்சொற்களுக்கு முன்னும் பின்னும் வருகின்ற பெயர், வினைகளை ஆராய்ந்து பார்த்து இடத்திற்கேற்பப் பொருள் கொள்ளவேண்டும். அவை தத்தம் வரலாற்று முறைமையில் பொருள் விளங்கத்தோன்றும். (நூற்பா. 389)

உரிச்சொல்லும் தொன்றுதொட்டு வரும் மரபு வழியில் பொருள் உணர்த்தும் என்று சேனாவரையர் விளக்குவார். அவை இயற்கைச் சொற்களாகவே கொள்ளப்பெற வேண்டியவை; குழுவின் வந்த குறிநிலை வழக்குப் போலச் செயற்கைச் சொற்கள் அல்ல.

இன்னின்ன பொருளைத்தரும் என்று மேலே கூறப்பட்ட உரிச் சொற்களுக்கு அப்பொருள்களேயன்றி வேறு பிற பொருள்களும் தோன்றும். அவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். (நூற்பா. 390)

பொருட்குப் பொருள் தெரியின் அது வரம்பின்றே (நூற்பா 391)

ஒரு சொல்லுக்குச் சொல்லப்பட்ட பொருளுக்குப் பொருள் யாது என்று சொல்லிக்கொண்டே போவோமாயின் அவ்வாராய்ச்சி எல்லையின்றி நீண்டு கொண்டே போகும்.

'கடி' என்னும் சொல்லிற்கு நறுமணம் என்று பொருள் கூறியபின் 'நறுமணம்' என்பதன் பொருள் என்னவென்றும், அதற்குப் பயன்படுத்தும் சொற்களின் பொருள் என்னவென்றும் ஆய்வை நீட்டிச் செல்வது தேவையற்றதும் பயனற்றதும் ஆகும் என்று தொல்காப்பியர் தெளிவாக்கி விடுவதைக் காண்க.

இக்கருத்தை இருபதாம் நூற்றாண்டில் டெரிடா (Derida) என்னும் மேலை அறிஞர் பெரிதுபடுத்திப் பேசிப் பெரும் பாராட்டினைப் பெற்றார்.

"The meaning of a word is endlessly deferred" என்பது டெரிடாவின் கூற்று.

> கேட்பவனின் உணரும் தன்மையறிந்து அதற்கேற்ற முறையில் பொருள்கூறினால் அவன் சொல்லுக்குரிய பொருளை மாறுபடாமல் புரிந்துகொள்வான். (392)
>
> ஒருவர் ஒன்றை உணரும் முறைமை அவரது அறிவாற்றலைப் பொறுத்தே அமையும். (393)
>
> மொழிப்பொருள் காரணம் விளிப்பத் தோன்றா. (394)

மேற்சொன்ன உரிச்சொற்கள் அவற்றின் பொருளுக்கு உரிமையாவதற்கு உரிய காரணம் வெளிப்படத்தோன்றாது.

சொற்களில் எழுத்துக்கள் பிரிந்து நின்று வேறுவேறு பொருள் உணர்த்தும் இயல்பு உரிச்சொற்களுக்குப் பொருந்துவதில்லை. (395)

இறுதிநூற்பாவில் "மேற்சொன்ன உரிச்சொற்கள் அல்லாமல் அவற்றைப்போன்ற பல உரிச்சொற்கள் மிகுதியாகப் பரந்து காணப்படும்; அவை இத்துணை என்று சொல்லுதற்கு இயலா; எனவே அவற்றை இவ்வியலில் கூறப்பட்ட இலக்கண வரம்புகளோடு இணைத்துப் பார்த்துப் பொருள் கூறவேண்டும்" என்று தொல்காப்பியர் கூறுவது தமிழ்க்கவிதையின் சொல்வளத்தைக் குறிப்பால் உணர்த்தும்.

தமிழ்க்கவிதை மரபிற்கு இருக்கின்ற தொன்மையும் சிறப்பும் மேலை மொழிக்கவிதை மரபுகளுக்கு இல்லாமையால் மேலை மொழிநூல் வல்லுநர்கள் வரலாற்று மொழியியலிலோ, செய்யுள் வழக்கிலோ முதலில் அக்கறை காட்டாமல் தத்தம் மொழிகளின் வட்டார வழக்குகளைப் பெரிதுபடுத்திப் பேசி வந்தனர். ருசிய நாட்டு ரோமன் யாகப்சன் என்பார், ஒரு மொழியின் செயல்பாட்டைப் பேச்சு வழக்கிலோ, உரைநடை வழக்கிலோ காண்பதை விடவும் செய்யுள் வழக்கில் காண்பதே பெரிதென்று உணர்ந்து மொழியியல் திறனாய்வு அணுகுமுறையைக் கையாண்டு, சேக்ஸ்பியர் எழுதிய பாடல் ஒன்றின் பெருமையை எடுத்துக்காட்டினார். செய்யுள் கட்டமைப்பிற்குச் சொல்லே அடித்தளம் என்பதையும், ஒரு மொழி கவிதை ஊடகமாகப் பயன்படுவதே அதன் தலையாய சிறப்பென்பதையும் அறிந்த தமிழ்ச்சான்றோர் மிகத்தொன்மையான காலத்திலேயே தமிழைக் கவிதைமொழியாகச் செப்பம் செய்வதில் அளவு கடந்த ஆர்வம் காட்டினர் என்பதைத் தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் ஆகிய முப்பகுதி நூற்பாக்களாலும் அறியலாம்.

## செந்தமிழ் வளர்க்க வாரீர் !

*ஆட்சி புரியும் அமுதத் தமிழ்வளர்ப்போம்*
*வீட்சி இனிநமக்கு வேண்டாமே - மாட்சிமிகும்*
*பண்டைத் தமிழ்ப்புலவர் பண்புகொண்டு செந்தமிழ்க்குத்*
*தொண்டுசெய வாரீர் துணிந்து,*

*இன்பத் தமிழ் வளர்ப்போம் என்றுமே தான்றொலையாத்*
*துன்பத் தொடரொழிப்போம் தூக்கமின்றி - அன்புத்*
*தமிழீர்! எழுவீர் தரணியெலாம் வாழ்வீர்*
*தமிழ்வளர்க்கும் நாளிதுவே தான்.*

*அன்பு-கருணையானந்தா.*

# சைவசித்தாந்தமும் திருமந்திரமும்

- முனைவர் **உ.கருப்பத்தேவன்**
உதவிப்பேராசிரியர் - தலைவர் (பொ)
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.

**சென்ற இதழின் தொடர்ச்சி**

**'பசு' பற்றிய விளக்கம்**

சிவனும் சீவனும் ஒன்று என்னும் கொள்கையை உடையவர் திருமூலர். அவர் பசுவாகிய ஆன்மாவின் இயல்பினை,

*"உன்னும் அளவில் உணரும் ஒருவனைப்*
*பன்னு மறைகள் பயிலும் பரமனை*
*என்னுள் இருக்கும் இளையா விளக்கினை*
*அன்மையன் என்று அறிந்து கொண்டேனே"*

*(திருமந்திரம், ஏழாம் தந்திரம், பா.எண்.2005)*

என்னும் பாடலில் தெளிவுபடுத்தியுள்ளார்.

மனத்தால் நினைத்த உடனேயே நினைவில் உணர்ந்தறியப் படுகின்ற பரம்பொருளான சிவனை, வேதங்கள் பலகாலும் மீண்டும் மீண்டும் போற்றி வழிபடுகின்ற பரம தயாளனாகிய சிவனை, என் உள்ளத்தே ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் தூண்டா மணிவிளக்கை என்னில் வேறாகாதவனை, என்னுள் என்னாக ஒன்றிக் கலந்திருப்பவனை நான் உணர்ந்து கொண்டேன் என்று திருமூலர், பசுவில் கலந்திருக்கும் பதியின் இயல்பை எடுத்துக் கூறியுள்ளார். சீவன், சிவத்தில் கலக்க வேண்டும் என்கின்றார்; சிவனும் சீவனும் ஒன்றே; வேறல்ல என்பதைத் திருமூலர் பல பாடல்களில் அழுத்தமாக வலியுறுத்திக் கூறியுள்ளார்.

வேதாந்த ஞானங்களைக் கற்றுத்தேர்ந்த பசுவாகிய உயிர்கள், அனுபவஞானமும் பக்குவமும் இல்லாமல் வீணாகப் பிதற்றிக் கொண்டு வீதி வீதியாகத் திரிந்தாலும், வளம் படைத்தவர்களும் மேன்மக்களும் அரசச் செல்வாக்குப் பெற்ற உயிர்களும் தங்கள் செல்வாக்கை வெளிக்காட்டிக் கொள்ளப் பட்டம் பதவிகளைப் பெற்றுச் சுற்றித் திரியினும், முதிர்ந்த சிவனருள் பெற்றவர்களின் உண்மை அறிவான ஒரு குடம் பால்தான் உலகிற்குப் பயன்தந்து நன்மை பயக்கும் என்கின்றார் திருமூலர்.

*"கற்ற பசுக்கள் கதறித் திரியினும்*
*கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினும்*
*முற்ற பசுக்கள் ஒருகுடம் பால்போதும்*
*மற்ற பசுக்கள் வறள் பசுதானே"*

*(திருமந்திரம், ஏழாம் தந்திரம், பா.எண்.2015)*

சுற்றித்திரியும் ஆன்மாக்களாகிய பசுக்கள் (சீவன்கள்), முதிர்ந்த சிவஞானத்தை நாடவேண்டும் என்பதே இப்பாடலின் கருத்தாகும்.

**பதி, பசு, பாசம் ஒன்றாதல்**

பதியாகிய இறைவனும் பசுவாகிய உயிரும் பாசமாகிய பிணிப்பும் தளைகளும் ஒன்றாக இருக்கின்ற தன்மையே பதிபசுபாசம் வேறின்மையாகும். அறிவுக்கு அறிவான ஆருயிர்க்குத் தலைவனான பரம்பொருளும், ஆன்மாக்களைப் பற்றிவரும் பாசமும் மிகவும் தொன்மையானது. தொன்மையான சிவம், ஆன்மாவாகிய சீவனுள் பதிந்தால் ஆன்மாக்களின் பாசப் பயனாகப் பிறவித் துயரங்கள் அறுந்துவிடும். 'பசு' விடுதலை பெறும் என்கின்றார் திருமூலர். இதனை அவர்,

*"அறிவுஅறிவு என்ற அறிவும் அனாதி*
*அறிவுக்கு அறிவாம் பதியும் அனாதி*
*அறிவினைக் கட்டிய பாசம் அனாதி*
*அறிவு பதியின் பிறப்பு அறுந்தானே"*

*(திருமந்திரம், எட்டாம் தந்திரம், பா.எண்.2405)*

பிரமன், திருமால், உருத்திரன் முதலான தேவர்கள் தொடங்கி உலகின் உயிரினங்கள் கோடிகோடியாகும். இந்த உயிர்க்குலத்தை ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று பாசமலங்கள் இறுக்கமாகப் பிணித்துள்ளன. இது குளம் குட்டைகளில் உள்ள நீர் அழுக்குப்படிந்து படலம்போல மேலே படிந்திருக்கும் பாசியைப் போன்றது. இது நீரை மறைத்திருக்கும். இதை விலக்கினால் தெளிந்த நீர் தெரியும். இதைப் போலவே ஆருயிர்களின் அறிவை ஆணவம், கன்மம், மாயை என்னும் பாச அழுக்குகள் மறைத்து நிற்கின்றன. இந்த மறைப்பை நீக்கினால் பதியின் காட்சி தோன்றும். எனவே பசுக்களைப் பற்றி நிற்கும் பாசங்கள் அகன்றால் பசுக்கள் பதியைப் பற்றும். பாசம் நீங்கிய பசு பதியுடன் சேரும்.

*"பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்*
*பசுக்களைக் கட்டிய பாசம் மூன்றுண்டு*
*பசுத்தன்மை நீங்கி அப்பாசம் அறுந்தால்*
*பசுக்கள் தலைவனைப் பற்றி விடவே"*

*(திருமந்திரம், எட்டாம் திருமுறை, பா.எண்.2406)*

**ஐந்து மலங்கள்**

சைவசித்தாந்தக் கொள்கையின்படி ஆணவம், கன்மம், மாயை என மலங்கள் மூன்றேயாகும். ஆயினும் உலகிற்கு முதற்காரணமாகிய 'மாயை' காரணநிலை, காரியநிலையென இருநிலைகளைக் கொண்டது. 'மாயை' என்பதைக் காரணமாயையைக் குறிப்பதாகக் கொண்டு அதன் காரியங்களை 'மாயேயம்' என்னும் பெயரால் குறிப்பிடும் வழக்கும் உள்ளது. இப்பெயர் அசுத்த மாயையின் காரியத்திற்கே பொருந்தும். ஏனெனில் மாயை என்பது மயக்கும் தன்மையுடையதாகும். ஆதலால் சுத்தமாயையும் மாயையே ஆகும். எனினும் 'சுத்தமாயை', மாயையைப் போல மயக்கத்தைக் கொடுக்காமையால் அது 'விந்து', 'குடிலை' என்னும் பெயர்களால் கூறப்பெறுகின்றது. இந்நான்கிலும் வேறாக இருப்பது 'திரோதான சக்தி' என்பதாகும். இது உண்மையில் மலமோ, பாசமோ அன்று. இறைவனது அருளாகிய 'சக்தி'யாகும். 'திரோதான சக்தி' என்பது பாசங்கள் தம் செயலைச் செய்யுமாறு அவற்றது சக்திகளைத் தூண்டுகின்றது. இதனாலேயே இம்மலங்களின் காரியங்களாகிய மறைப்புக்கள் தோன்றுகின்றன. இது இல்லையெனில் பாசங்களின் செயல்களாகிய மறைத்தல் தொழில்கள் நிகழாது. இதன் காரணமாகவே திரோதான சக்தியும் ஒரு மலமாகக் கொள்ளப்படுகின்றது.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் சக்திகளைப் பதியாகிய இறைவன் தன் ஆற்றலைக் கொண்டு தூண்டாவிடில் அவற்றால் ஆகிய பந்தமும் பாசமும் உயிர்களுக்கு என்றும் இருந்துகொண்டே தான் இருக்கும். ஆதலால் அச்சக்திகளைத் தூண்டிச் செயற்படுத்தினால் அவை செயற்பட்டுத் தமது சக்தியை இழக்கச் செய்யும். அவ்வாறு மும்மலம் தனது சக்தியை இழக்கும்போது, அவற்றால் ஏற்படும் மறைப்புக்கள் நீங்கி விளக்கம் பெற்று உயிர்கள் உயர்நிலையை அடையும். ஆதலால் இதனை நற்செயலாகக் கருதலாம். ஆதலால் திரோதான சக்தி அருளேயாயினும், அது மறக் கருணையால் கொடுமையால் தோன்றுதலின் அதனை **'அருட் சக்தி'** எனக்

குறிப்பிடாமல், சைவ சித்தாந்தம் **'திரோதான சக்தி'**, **'திரோதான மலம்'** எனக் கூறுகின்றது. மலங்களின் சக்தி மெலிந்து உயிர்கள் பக்குவநிலையைப் பெறுமாயின், இத்திரோதான சக்தி தனது மறுதலைச் செயல்களிலிருந்து விடுபட்டு அருட் சக்தியாக மாறி ஆன்மாவில் படியும். அதுவே **'சத்தி நிபாதம்'** ஆகும். சிவப்பிரகாசம் 'திரோதான சக்தி' என்னும் மலத்தின் இயல்புகளை,

*"பாகமாம் வகைநின்று திரோதாயி சக்தி*
*பண்ணுதலான் மலம்எனவும் பகர்வர்; அதுபரிந்து*
*நாகமா நதிமதியம் பொதிசடையான் அடிகள்*
*நணுகும்வகை கருணைமிக நயக்குந்தானே"*

*(சிவப்பிரகாசம், பா.எண்.20)*

எனவும்,

*"முற்சினமருவு திரோதாயி கருணை யாகித்*
*திருந்தியசத் திநிபாதம் திகழு மன்றே"*

*(சிவப்பிரகாசம், பா.எண்.48)*

எனவும் வலியுறுத்திப் பேசுகின்றது. அருள்நந்தி தேவநாயனாரின் சிவஞான சித்தியாரில் (சிவஞான சித்தியார், 2.86) முளை, தவிடு, உமி என்னும் உவமைகள் முறையே கன்மம், மாயை, ஆணவம் ஆகியனவற்றைக் குறிக்கும். இங்ஙனமே போகம், பந்தம், போத்திருத்துவம் என்பனவற்றை நிரல்நிரையாகக் கன்மம், மாயை, ஆணவம் எனக் கொள்ள வேண்டும்.

மலங்களுள் ஆணவமே முதலாகும். அது உயிர்களுக்குச் செம்பில் களிம்பு போல இயற்கைக் குற்றமாக உயிர்தோன்றிய காலத்திலிருந்து உடனிருப்பது. நோய்போல உள்ள ஆணவமலம் உயிர்களுக்கு இயற்கையாக இருப்பதால், அதற்கு மருந்துபோல உள்ள கன்மமாயைகளும் அந்த ஆணவமலத்தின் காரணமாக உயிர்களுக்கு அனாதியாகும். சைவசித்தாந்த ஆசிரியர்கள் இதனை 'அரிசி' என்று உண்டோ அன்றே அதற்கு உமியும் தவிடும் முளையும் இருத்தல் போன்றது என விளக்குவர்.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# நற்றிணையில் பண்பாட்டு விழுமியங்கள்

**வை.காசிநாததுரை,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ பரம கல்யாணி கல்லூரி (சுயநிதி)
ஆழ்வார்குறிச்சி - 627412
கைபேசி: 9789646026

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். எட்டுத்தொகை நூல்களில் முதலில் வைத்துப் புகழப்படும் நூல் நற்றிணை என்னும் அக இலக்கியமாகும். இந்நூலில் கடவுள் வாழ்த்து நீங்கலாக 400 பாடல்கள் உள்ளன. இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார். நற்றிணையைப் பாடிய புலவர்கள் 175 பேர் ஆவர். இந்நூலைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. நற்றிணை பழந்தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழ்கிறது. நற்றிணையில் பண்பாட்டு விழுமியங்கள் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**பண்பாடு குறித்த விளக்கம்**

நல்ல பண்புகளின் வெளிப்பாடே பண்பாடு ஆகும். பண்பு என்னும் சொல் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியர் இதனை,

"நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே" (தொல்.செய்.164:6)

"இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி" (தொல்.உரி.1:2)

எனக் குறிப்பிடுகின்றார்.

"பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகல்" (கலி.133:3)

எனக் கலித்தொகை கூறுகிறது.

திருவள்ளுவர் பண்புடைமை என்னும் அதிகாரத்தில்

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்" (குறள். 996)

என்று கூறுகின்றார்.

பண்பாடு என்பதற்குச் செவ்வி, குணநலம், பெருமை, தன்மை, அமைதி, இயல்பு, சீர்திருத்தம் என மதுரைத் தமிழ்ப் பேரகராதி விளக்கம் தருகிறது. (II பாகம்.2004:114)

**நற்றிணையில் வாழ்வியல் விழுமியங்கள்**

வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது. மனிதன் உணர்ச்சிக்கும் அறிவிற்கும் ஏற்பச் செயல்படுபவன். இனிய வாழ்க்கைக்குப் பொருள் தேவை. பொருளீட்டச் செல்லும் போது மனைவியைப் பிரிவது இயல்பு. அச்சூழ்நிலையில் மனம் அதற்கு இடங்கொடுக்காமல் மனதில் போராட்டம் ஏற்படுகிறது. பொருள் ஈட்டுவதற்காகத் தலைவியைப் பிரிந்த தலைவன் மனதில் நடக்கும் போராட்டத்தினை,

"தேய்புரி பழங்கயிறு போல
வீவது கொல்என் வருந்திய உடம்பே" (நற்.284: 10-11)

என்னும் பாடல் வரிகளால் அறியலாம்.

இப்பாடலின் வாயிலாகத் தலைவன் உடலானது அழிந்து விடுமோ என்பதை இரு களிற்று யானைகள் வலிமையுடன் பற்றி ஈர்த்த புரிகளைக் கொண்ட பழைய கயிறு போல அழ வேண்டியதுதானோ என எண்ணுகிறான்.

இவ் வாழ்வியல் விழுமியத்தினை நற்றிணையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல்**

மனிதன் உலகத்தோடு ஒட்டி வாழும் இயல்பினன். இப்பண்பினை மனிதன் எப்போதும் வளர்த்து வருவதுடன் உலகிற்குக் கொடையாகவும் வழங்கி வருகின்றான் என்பதை,

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்" (நற்.355:67)

என்னும் பாடல் குறிப்பிடுகிறது. இதனால் உலகியலின் உலகளாவிய பண்பாட்டு விழுமியத்தை அறிய முடிகிறது. நண்பன் நம் எதிரிலேயே நஞ்சினை ஊற்றிக் கொடுக்கும்போது அவன் நெஞ்சம் கலங்கக் கூடாது என்று அந்நஞ்சையும் உண்பதே நாகரிகம் என்னும் பண்பாட்டு விழுமியத்தை நற்றிணையின் மூலம் அறிய முடிகிறது.

**செல்வம்**

வாழ்வில் சிறந்த செல்வம் எது என்பதை நற்றிணை தெளிவாக உணர்த்துகிறது. ஏழைகளின் துன்பத்தைப் போக்கிக் கருணையுடன் கண்ணோட்டம் உடையவராய் வாழ்வதே உண்மையான செல்வம் நிறைந்த வாழ்க்கை என்பதை,

“நெடிய மொழிதலுங் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வஞ் செல்வமென் பதுவே” (நற்.210: 5-9)

என்னும் பாடல் உணர்த்துகிறது.

அரசர்கள், வள்ளல்கள் ஆகியோரால் பரிசுகளும் செல்வங்களும் பெற்று வாழ்வது மனிதனுக்குச் சிறந்த செல்வம் ஆகாது. ஒவ்வொருவர்க்கும் அவரவர் வினைப்படியே செல்வம் வந்து சேரும். நம் அருகில் வாழ்கின்றவர்களின் இன்னலை நீக்கி இரக்கம் காட்டுவதே உண்மையான செல்வமாகும். இப்பண்பு நற்றிணையில் தலைவனுக்குத் தோழி எடுத்துரைத்த சிறந்த பண்பாட்டு விழுமியமாகும்.

**உயிர்பேணல்**

அஃறிணைப் பொருள்களோடு பேசுவதும் அவற்றை உறவாகப் போற்றுவதும் நற்றிணையில் உயர்வாகக் காட்டப் பெற்றுள்ளது. தலைவன் ஒருவன் தன் தலைவியைக் காணப் பகலில் அவள் வீட்டருகில் உள்ள புன்னை மரத்தடியில் சந்தித்தான். அங்கு அத்தலைவனைச் சந்திக்கத் தலைவி நாணினாள். அதற்கு அவள் காரணம் கூறினாள். நாங்கள் விளையாடியபோது மறந்து போட்டுவிட்ட புன்னை விதையிலிருந்து முளைத்தது இது. இதனைப் பாலும் தேனும் பெய்து நாங்கள் வளர்த்தோம். எங்கள் தாய், ‘உங்களை விட உங்கள் தங்கையான புன்னை மிக நல்லவள் என்று பாராட்டுவாள். எனவே என் தங்கையான இப்புன்னையின் நிழலில் உம்மைக் காண நாணுகிறேன் என்றாள். இதனை,

“விளையாட்டு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய

நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே" (நற்.172: 1-6)

என்னும் பாடல் உணர்த்துகிறது. இப்பாடலின் வாயிலாக மரங்களையும் உறவாகப் போற்றும் பண்பாட்டு விழுமியத்தை அறிய முடிகிறது.

**முடிவுரை**

நற்றிணையின் வாயிலாக மனித வாழ்வில் பின்பற்ற வேண்டிய பல்வேறு பண்பாட்டு விழுமியங்களை அறிந்து கொள்ள முடிகிறது. பிற உயிர்களையும் தம் உயிர் போலப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற வாழ்வியல் விழுமியத்தை உணர்ந்து கொள்ள முடிகிறது. அஃறிணை உயிர்களிடமும் அன்பு காட்ட வேண்டும் என்னும் பண்பாட்டு விழுமியத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

வள்ளுவன் செய்த திருக்குறள் ஒரு சார்
வான்சுவை கொண்டகம் பன்கவி ஒருசார்
தெள்ளும் சிலப்பதி காரநூல் ஒருசார்
தேனை நிகர்திரு வாசகம் ஒருசார்
கள்ளமில் சேக்கிழார் காப்பியம் ஒரு சார்
கற்றவர் போற்றுதொல் காப்பியம் ஒரு சார்
உள்ள முருகநின் றார்த்தன விரைவில்
ஒண்டமி ழேபள்ளி எழுந்தரு ளாயே!

- பண்டித அ.முத்துசாமிப் புலவர்

# சங்கச் செய்திகள்

01.09.2018 அன்று மதுரையில் முரசொலி அறக்கட்டளை சார்பாக நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கிடையேயான மாவட்ட அளவிலான பாவேந்தர் பாடல் ஒப்புவித்தல் போட்டியில் நமதுக் கல்லூரி, முதுகலை முதலாமாண்டு மாணவி த.கார்த்திகா முதலிடம் பெற்று ரூபாய் 3000 ரொக்கப் பரிசும், இளம் இலக்கியம் முதலாமாண்டு மாணவன் பெ.தெய்வம் இரண்டாமிடம் பெற்று ரூபாய் 1500 ரொக்கப் பரிசும் பெற்றனர்.

03.09.2018 அன்று முற்பகல் 11 மணியளவில் சி.இலக்குவனார் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. மூன்றாமாண்டு இளம் இலக்கியம் மாணவி பா.மினிதா அவர்கள் தனது உரையில் "இலக்குவனார் தமிழால் வாழாமல் தமிழுக்காகவே வாழ்ந்த பெருமகனார். தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் இரு கண்களாகக் கொண்டவர். பல்கலைக்கழகக் கல்வி தாய்மொழியாகிய தமிழிலேயே வேண்டும் எனப் போராடியவர். நாவன்மை மிக்கவர். பெண்ணுரிமை மற்றும் பெண்விடுதலைச் சிந்தனைகளை இலக்கியங்கள் மூலம் பரப்பிய திராவிட இயக்கக் கவிஞர்களுள் முன்னோடி. 'சங்க இலக்கியம்' எனும் வார இதழ் வாயிலாகப் பொதுமக்களுக்குச் சங்க இலக்கியத்தைக் கொண்டு சென்றவர். 'இலக்கியம்', 'திராவிடக் கூட்டரசு', 'குறள்நெறி' ஆகிய இதழ்களையும் வெளியிட்டவர். 'தொல்காப்பியர் திருநாள்' கொண்டாடியவர். பரந்தாழ்ந்த புலமை, நுண்மான் நுழைபுல ஆய்வுத்திறன், நிமிர்நடைத்துணிவு கொண்டவர். தமிழ்க் காப்புக் கழகத்தை உருவாக்கியவர். தமது ஆங்கில அறிவின் திறத்தால் தமிழின் மேன்மையை உலகுக்குக் காட்டியவர். வாழ்நாள் முழுவதும் தமிழ்காத்துத் தமிழ் வளர்க்கும் செந்தமிழ்க் காவலராகவே திகழ்ந்தவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக சி.இலக்குவனாரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

11.09.2018 அன்று முற்பகல் 11 மணியளவில் மகாகவி பாரதியாரின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளங்கலை மூன்றாமாண்டு மாணவன் வீ.அதிவீரபாண்டியன் தனது உரையில், "மகாகவி பாரதி புதுக்கவிதைகளுக்குத் தகப்பன். தமிழ், தமிழர் நலன்,

பெண் விடுதலை, தீண்டாமை எதிர்ப்பு போன்றவற்றிற்காக ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே தன் கவிதையால் உரக்க கூறியவர். மகாகவி பாரதி ஒரு கவிஞனாக மட்டும் இல்லாமல் ஒரு சிறந்த எழுத்தாளராகவும், நல்ல பத்திரிக்கையாசிரியராகவும் இருந்தவர். கவிபாடும் ஆற்றலாலும், தமிழ்ப் புலமையாலும், தனது பதினோராவது வயதிலேயே பாரதி என்ற பட்டம் எட்டயபுரம் மன்னரால் சூட்டப் பெற்றவர். தமிழ் மட்டுமல்லாது சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம், வங்காளம் போன்ற பிற மொழிகளிலும் தனிப் புலமை பெற்று விளங்கியவர். இத்தனை மொழிகளிலும் புலமை பெற்ற பின்னரே "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தெளிவாகச் சொன்னார் மகாகவி பாரதி. "ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்" என்று விடுதலைக்கு முன்பாகவே பாடிய தீர்க்கதரிசி பாரதி" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக மகாகவி பாரதியாரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

11.09.2018 அன்று செந்தமிழ்க் கல்லூரி நாட்டுநலப்பணித்திட்டமும் மதுரை மாநகர போக்குவரத்து காவல் துறையும் இணைந்து நடத்திய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. மதுரை மாநகர் போக்குவரத்துத் திட்டப்பிரிவு சார்பு ஆய்வாளர் திரு.எஸ்.பாலகிருஷ்ணன் தமது கருத்துரையில் சாலை விபத்துக்கான காரணங்கள் குறித்தும் அவற்றைத் தடுப்பதற்கான தற்காப்பு விதிமுறைகள் குறித்தும் விவரித்துப் பேசினார். இந்நிகழ்வில் 100 நாட்டு நலப்பணித்திட்ட மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி மற்றும் முனைவர் பா.நேருஜி ஆகியோர் செய்தனர்.

11.09.2018 அன்று தமிழ் வளர்ச்சித் துறை நடத்திய அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கிடையேயான மாவட்ட அளவிலான கவிதைப் போட்டியில் நமதுக் கல்லூரி, முதுகலை முதலாமாண்டு மாணவி த.கார்த்திகா முதலிடமும் ரூபாய் 1000 ரொக்கப் பரிசும் பெற்றார்.

12.09.2018 அன்று மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் 118ஆவது தொடக்கவிழா செந்தமிழ்க் கல்லூரி வைரவிழா அரங்கில் மிகச் சிறப்பாக

நடைபெற்றது. நான்காம் தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை தாங்கினார். **"நான்காம் தமிழ்ச்சங்கம் தோற்றமும் ஏற்றமும்"** என்ற பொருளில் அமைந்த கருத்தரங்கின் முதல் அமர்வில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர்கள் முனைவர் இ.சுந்தரமூர்த்தி, முனைவர் ம.திருமலை மற்றும் புலவர் செந்தலைக்கௌதமன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் **திருமிகு.பழ.நெடுமாறன்** அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அவர் தமது உரையில் **"1956 மே மாதம் 30 தேதியிலிருந்து ஜூன் மாதம் 5 தேதி வரை கொண்டாடப்பட்ட மதுரை தமிழ்ச்சங்க பொன்விழா 6 நாள் விழாவாக ஆய்வரங்கம் கருத்தரங்கம் என மிக கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கலந்து கொள்ளாத தமிழறிஞர்களே இல்லை எனலாம். அத்தகைய விழாவே உலகத்தமிழ் மாநாடு நடத்துவதற்கு உந்துதல் ஆகவும் முன்னோடியாகவும் அமைந்தது. தமிழினை மட்டுமே கற்பிக்கும் தமிழ்க் கல்லூரியை உருவாக்குவது தமிழ்ச்சங்கத்தின் நோக்கங்களுள் ஒன்று. கலாசாலை மட்டுமன்றி அச்சகம், நூலகம் என பல்வேறு உட்கட்டமைப்புகளுடன் தொடங்கப்பட்ட தமிழ்ச்சங்கம் தமிழுக்கான தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக காரணமாக அமைந்தது. தீ விபத்திற்கு பிறகும் பல ஓலைச் சுவடிகளும் அரிய பல தமிழ் நூல்களும் பாதுகாக்கப்பட்டு வருவது பாண்டியன் நூலகத்தின் சிறப்பம்சமாகும்"** என்று குறிப்பிட்டார். பிற்பகல் இரண்டாவது அமர்வில் நான்காம் தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழுவின் உறுப்பினர் பொறிஞர் க.சி.அகமுடைநம்பி அவர்கள் தலைமை தாங்கினார். சிவகங்கை மன்னர் துரைசிங்கம் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ம.பெ.சீனிவாசன், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை மேனாள் தலைவர் முனைவர் கு.சதாசிவன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். நான்காம் தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்கள் நிறைவுப் பேருரையாற்றினார். முன்னதாக இரு அமர்வுகளுக்கும் கல்லூரியின் முதல்வர் கி.வேணுகா, துணை முதல்வர் கோ.சுப்புலெட்சுமி ஆகியோர் முறையே வரவேற்புரையாற்றினர். உதவிப்பேராசிரியர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி ஆகியோர் நன்றி கூறினர். விழாவில் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கல்லூரிக்குழு

உறுப்பினர்கள், மேனாள், இந்நாள் பேராசிரியர்கள் தமிழ் ஆர்வலர்கள், சான்றோர்கள், மாணவர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

20.09.2018 அன்று மங்கையர்க்கரசி கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் சாரல் விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட நெருப்பில்லா உணவு உருவாக்கும் போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு மாணவியர் தி.செண்பககனிமொழி மற்றும் பா.ஸ்ரீதேவி இரண்டாமிடமும், முதுகலை இரண்டாமாண்டு மாணவியர் ஜெ.செல்வராணி மற்றும் அ.பாண்டிச்செல்வி மூன்றாமிடமும் பெற்றனர்.

21.09.2018 அன்று நான்காம் தமிழ்ச்சங்கம் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை இணைந்து 'தமிழ்நாடு' பெயர் சூட்டல் பொன்விழா ஆண்டு சிறப்புக் கருத்தரங்கம் சங்க வளாகத்தில் நடைபெற்றது. மதுரை மாவட்ட ஆட்சியர் எஸ்.நடராஜன் இ.ஆ.ப. தலைமை வகித்தார். அமைச்சர்கள் மா.பா.பாண்டியராஜன், ஆர்.பி.உதயகுமார் பங்கேற்று மாவட்ட அளவிலான கவிதை, கட்டுரை, விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்குப் பரிசுகளை வழங்கினர். இவ்விழாவில் பேசிய அமைச்சர் மா.பா.பாண்டியராஜன் அவர்கள் தமது உரையில், “தமிழ் இலக்கியம் படித்தவர்களுக்கு அனைத்துத் துறைகளிலும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம். படைப்புதிறன், தொல்லியல், கலை, பண்பாடு, கலாசாரத் துறையில் வேலைவாய்ப்பு அதிகம் உள்ளது. உலகத் தமிழ்ச்சங்கத்தை நிர்வகிக்க முதற்கட்டமாக உலகில் உள்ள ஐம்பது அமைப்புகளைத் தேர்வு செய்து ஒருங்கிணைக்க உள்ளோம். இதில் வெளிநாடுகளில் இருந்து இருபது அமைப்புகளும், இந்தியாவின் பிற பகுதிகள் மற்றும் தமிழகத்தில் இருந்து முப்பது அமைப்புக்களும் தேர்வு செய்யப்படும். இதன் மூலம் தமிழ்மொழி வளர்ச்சி குறித்து பல்வேறு ஆய்வுகள் நடத்தப்படும்” என்று குறிப்பிட்டார். அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேசுகையில், “நான்காம் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரியை உருவாக்கிய வள்ளல் பாண்டித்துரைத் தேவருக்கு நாளும் நநம் நன்றி தெரிவிக்க வேண்டும். அவருக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் அவரது சிலையை நகரின் மையப் பகுதியில் அமைக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்” என்றார். தமிழ் வளர்ச்சித்துறை துணை இயக்குநர் முனைவர் க.பசும்பொன் வரவேற்றார். நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் குமரன் சேதுபதி, கல்லூரிச் செயலாளர் இராணி லட்சுமி குமரன் சேதுபதி, சங்கச் செயலர்

வழக்குரைஞர் மாரியப்பமுரளி, கல்லூரி முதல்வர்(பொ) முனைவர் கி.வேணுகா, துணைமுதல்வர் முனைவர் ரேவதி சுப்புலெட்சுமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ம.திருமலை அவர்கள் கருத்துரை வழங்கினார்.

25.09.2018 அன்று அம்பிகா மகளிர் கல்லூரி தமிழ்த்துறை மற்றும் கம்பன் தமிழ் இலக்கிய மன்ற கலைவிழா இணைந்து நடத்திய அனைத்துக் கல்லூரிகளுக்கிடையேயான கவிதை, ரங்கோலி, பேச்சு மற்றும் நாட்டுப்புற நடனப் போட்டியில் நமது கல்லூரி மாணவ, மாணவியர் பங்கேற்று முதலிடம் பிடித்து சுழற்கோப்பை பரிசை பெற்றனர்.

26.09.2018 அன்று முற்பகல் 11 மணியளவில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளங்கலை இரண்டாமாண்டு மாணவன் மா.அழகுவேல் தமது உரையில், "குளிர்ந்த பார்வை, வலிய உள்ளம், இனியவை செய்யும் உண்ணம், பாரெல்லாம் பரந்த நோக்கம், இனிய சொற்கள், இவையே கவிமணியின் நிரந்தர வடிவங்களாகும். விடுதலைப் போராட்டத்தைக் கூர்மைப்படுத்தியதில் கவிமணியின் பாடல்களுக்கும் பெரும் பங்கு உண்டு. பெண்கள் நிலை உயரப் பிரபந்தம் அளவிலான 'மான்மியம்' நூலினை இயற்றியவர். குழந்தை இலக்கியத்திற்குப் புத்துயிர் ஊட்டிப் புதுவாழ்வு தந்தவர். 'வாழ்த்துக்கவி' எனப் போற்றுமளவிற்கு பல வகை வாழ்த்துப் பாக்கள் பாடியவர். 21 சான்றோர் மீது இரங்கற் பாக்களும் பாடியுள்ளார். இயற்றமிழ் ஆக்கத்தில் கவிமணி காட்டிய ஆர்வம் இசைத்தமிழ் ஆக்கத்திலும் அவருக்கு இருந்தது. 73 கீர்த்தனங்களைப் படைத்துள்ளார். அவருடைய மொழிநடையும், கவிதைகளைப் போலவே, தெள்ளத் தெளிவானதாக உண்மை தெரிந்து உரைப்பதாக உள்ளன. அவரது உரைநடைப் படைப்புகள், அவரது மேடை உரைகளிலும், சிறுசிறு கட்டுரைகளிலும் காணக் கிடைக்கின்றன. வரலாற்று ஆய்விலும் தனி ஈடுபாடு கொண்டிருந்தவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக கவிமணி அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

28.09.2018 அன்று மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரியின் மேனாள் மாணவர்கள் சங்கத்தின் சார்பில் மேனாள்

முதல்வர்(பொ.) முனைவர் சு.விஜயன் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் கவிதை நூலுக்கு முதல் பரிசு பெற்ற செந்தமிழ்க் கல்லூரி மேனாள் மாணவர் கவிஞர் சுரா (எ) ராமச்சந்திரன் ஆகியோருக்குப் பாராட்டு விழா கல்லூரிச் செயலாளர் இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி அவர்கள் தலைமையிலும், சங்கச் செயலர் வழக்கறிஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்றது. மேனாள் மாணவர்கள் சங்கத் தலைவர் மு.இளங்கோவன் வரவேற்புரை நல்கினார். முனைவர் சு.விஜயன் மற்றும் கவிஞர் சுரா ஆகியோரை பட்டிமன்றப் பேச்சாளர் ராஜா பாராட்டிப் பேசி சிறப்புச் செய்தார். மேனாள் பேராசிரியர்கள் அரிராமநாதன், பொன்.விசயன், க.செயமூர்த்தி, சுந்தரி, மேனாள் முதல்வர் க.சின்னப்பா மற்றும் பலர் பாராட்டுரை வழங்கிப் பெருமை சேர்த்தனர். பட்டிமன்றப் பேச்சாளர் எஸ்.ராஜா அவர்கள் பேசும் போது, “தினமும் வாசிக்கும் பழக்கம் உருவாக்கினால் எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாக உருவாகலாம். பண்பினைக் கற்றுத்தரும் தமிழைப் போற்றிப் படித்துப் பாரில் உயர்வு சேர்க்க அனைவரும் இலக்கியங்களைக் கற்று உயர வேண்டும்” என்றார். விழா நிகழ்ச்சிகளை கவிஞர் ஆறுமுகப்பெருமாள் தொகுத்து வழங்கினார். முனைவர் பூ.பூங்கோதை நன்றி கூறினார்.

*அவர் உப்பால் வாழ்ந்தோர்கள்! அலைகடல்போல் பலராவார்!*
*ஓரிருவர் மூவரெனில் ஒருவாறு கூறிடுவேன்!*
*ஆயிரம்பேர் பயனடைந்தால் அவர்பெயரை உரைப்பதெப்போ?*
*பாரியவன்! காரியவன்! பயன்கருதாத் தமிழ்த் தொண்டால்!*
*மாரியவன்! பாண்டித்துரை மாண்பிற்கோர் உவமையிலை!*
*அறம்பொருள் இன்பம்சொல் ஆற்றோர்தம் தேன்பாவைப்*
*பெருவெண்ணெய்த் திரட்டினைப்போல் பன்னூலாம்*
*(நுங்கீந்தார்!*

*-செஞ்சொற் பாவலர்: ப.சங்கரலிங்கம்*

# நவம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்




பரிதிமாற்கலைஞர்
(நவ.2)



சோமலே
(நவ.4)



கி.வா.ஜகந்நாதன்
(நவ.4)



தமிழ்நாடன்
(நவ.9)



சங்கரதாசு சுவாமிகள்
(நவ.13)




யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர்
(நவ.16)



வ.உ.சி
(நவ.18)



அ.சிதம்பரநாதனார்
(நவ.22)



தனுஷ்கோடி ராமசாமி
(நவ.25)


பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

**ஆசிரியர் குழு**

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

# மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத் தேர்வு அறிவிப்பு

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தால் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவும். கூடுதல் மதிப்பெண்கள் பெறவும் வழிகாட்டியாக தமிழ்பாடம் மாதிரி தேர்வு சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

நடப்பாண்டு முதல் மாநில பாடத்திட்டத்தில் கூடுதலாக பதினொன்றாம் வகுப்பிற்கும், மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கும் மாதிரி தேர்வு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவியர்களுக்கு சங்கத்தால் சான்றிதழும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் பெரும் பயனுள்ளதாக இருக்கும். இந்த ஆண்டிற்கான சங்க தேர்வுகள் மாநில மற்றும் மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கு 19.01.2019-ஆம் நாளன்றும், பதினொன்றாம் வகுப்பிற்கு 05.01.2019-ஆம் நாளன்றும் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு 05.01.2019-ஆம் நாளன்றும் நடைபெறவுள்ளது. மாணவர்கள் அனைவரும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

திரு.அ.இராமலிங்கம்,
181/1-188, HMS காலனி
விராட்டிபத்து
மதுரை-10.

நேரில்

வெளியிடுபவர்: வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு,
மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1